செ.வெ.எண். 152 நாள் - 08.03.2024

# பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்டம் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)-ற்கு கீழ்க்கண்ட பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்ய உள்ளதால், பின்வரும் தகுதிகளுடன் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | தேர்ந்தெடுக்கப் படும் பதவிகள் | பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித்தகுதிகள் | ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | முதுநிலை ஆலோசகர் Senior Counselor | 1 | சமூகபணி, ஆலோசனை உளவியல் அல்லது மனிதவள மேலாண்மையில் முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். 2 ஆண்டுகள் தொண்டு நிறுவனங்கள், அரசு சார்ந்த திட்டங்களில் பணிபுரிந்தவராகவும், பெண்களுக்கு எதிரானவன் முறைகளில் ஒருவருடம் ஆலோசனை வழங்குவதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவும். உள்ளூரில் வசிப்பவராக இருத்தல் வேண்டும் | ரூ.20,000/- |
| 1 | சமூகநல தனியாளர் Case Worker | 3 | சமூகபணி, ஆலோசனை உளவியல் அல்லது மனிதவள மேலாண்மையில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். 1 ஆண்டு தொண்டு நிறுவனங்கள், அரசு சார்ந்த திட்டங்களில் பணி புரிந்தவராகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஒருவருடம் ஆலோசனை வழங்குவதில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்கள் மட்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கவும். உள்ளூரில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். | ரூ.15,000/- |

எனவே,ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)—ற்கு மேற்கண்ட பணியிடத்திற்கு விண்ணப்பங்களை நீலகிரி மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், உதகையில் 22 .3.2024-க்குள் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அணுக வேண்டிய அலுவலக முகவரி :**

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் வளாகம்,
பிங்கர்போஸ்ட், உதகை 643006
நீலகிரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 0423 2443392.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**

NilgirisPRO ProNilgiris NilgirisPRO